ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2253/7 - 2021 නොවැම්බර් මස 08 වැනි සඳුදා - 2021.11.08

2253/7 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 08 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

39 (அ) (1) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

2013, ஒற்றோபர் மாதம் 4 ஆந் திகதி 1830/51 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் (அத்தியாயம் 460) பிரசுரிக்கப்பட்ட 2013 ஆம் ஆண்டின் 298 ஆம் இலக்க காணி எடுத்தற் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் காப்பு வாசகம் (அ) வின் கீழான கட்டளையில் விபரிக்கப் பட்ட காணித் துண்டுகள் முழுமையாக அரசுரித்தாக்கப் பட்டுள்ளதோடு, அரசின் சார்பில் அச் சட்டத்தின் 40 ஆம் பிரிவின் (அ) பந்தியின் கீழ் இக் காணித் துண்டுகளின் உடைமையும் பொறுப்பேற்கப்பட் டுள்ளன. எனினும் அச் சட்டத்தின் (1979 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினால் உட்புகுத்தப் பட்ட) 39 (அ) ஆம்பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், காணி அமைச்சர் சமரகோன் முதியன்சேலாகே சந்திரசேன ஆகிய நான், குறித்த காணித் துண்டுகளில் கீழ்வரும் 1 அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணித் துண்டினை இக் கட்டளை மூலம் உரித்து நீக்குகின்றேன்.

எஸ். எம். சந்திரசேன,<br>காணி அமைச்சர்.

எனது இல.: 4 - 3/10/2012/LRB/221<br>
காணி எடுத்தற் உத்தியோகத்தரின்<br>
இல.: WGSWD&EIP/ACQ/KB/13<br>
காணி அமைச்சு,<br>
"மிஹிகத்த மெதுர",<br>
காணிச் செயலகம்,<br>
இல. 1200/6,<br>
இரஜமல்வத்தை வீதி,<br>
பத்தரமுல்லை.<br>
2021, நவெம்பர் 02.

### அட்டவணை I

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கெஸ்பேவ பிரதேச செயலாளர் பிரிவில், பொரலெஸ்கமுவ கிழக்கு A-533 மற்றும் வேரஹெர வடக்கு – 577 இன் கிராம அலுவலர் பிரிவில், வேரஹெர மற்றும் பொரலெஸ்கமுவ கிராமங்களில் அமைந்துள்ள, நில

அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2016.01.15 ஆந் திகதி ஆ.வ.கொ 9594 ஆம் இலக்க ஆரம்ப வரைபடத்தில் விபரமாக காட்டப்பட்ட பின் வரும் பெயரையும் விஸ்தீரணத்தையும் கொண்ட எல்லைகளுள் அமைந்த காணித் துண்டுகள்.

**1. துண்டு இல. 34; காணியின் பெயர்: இதிகஹ வத்தை; விஸ்தீரணம்: 0.0151 ஹெக்டயார்.**

வடக்கு: 3 ஆவது பாதையின் வரி மதிப்பீட்டு இல. 31/17 ஐ கொண்ட காணி; கிழக்கு: துண்டு இல. 35; தெற்கு: துண்டு இல. 35; மேற்கு: துண்டு இல. 33.

11 - 515

---

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

39 (அ) (1) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: LD/05/2003/VEP/493

பிரதேச செயலாளர் குறிப்பு இல.: අඹකෝ/3/5/අ/150

2019.10.25 ஆந் திகதிய 2146/35 ஆம் இலக்கமும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானியில் மும்மொழியில் பிரசுரிக்கப்பட்ட காணி எடுத்தற் சட்டத்தின் 39 (அ) (1) ஆம் பிரிவின் கீழான கட்டளையில் காணியில் விபரிக்கப்பட்ட, இல. 106, பிற்சேர்க்கை இல. 20 ஐ கொண்ட இறுதிக் கிராம வரைபடத்தில் “2005.07.28” ஆந் திகதிக்கு பதிலாக “2018.02.22” ஆந் திகதி என திருத்தப்படு கின்றது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

எஸ். எம். சந்திரசேன,
காணி அமைச்சர்.

காணி அமைச்சு,
“மிஹிகத்த மெதுர”,
காணிச் செயலகம்,
இல. 1200/6, இரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை.
2021, ஒற்றோபர் 07.

11 - 516